1978 செப்டம்பர் 13]

குதிரையாறு திட்டம் ஏற்கனவே போடப்பட்ட திட்டம். அதற்காக கடந்த ஆண்டிலே ஏறக்குறைய ரூ. 10,000 ஒதுக்கப் பட்டு அது மீண்டும் பரிசீலனையில் இருந்து வருகிறது. ஆகவே குதிரையாறு திட்டம் இன்னும் கைவிடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினு நேரம் முடிவுற்றது. மீதமுள்ள வினுக்களுக்கான விடைகள் நடவடிக்கைக் குறிப்பில் அச்சிட்டுக் கொடுக்கப்படும்.

உதகையில் கடிகாரத் தொழிற்சாலை.

*வினு எண். 195—திரு. போ. கோபாலன்:

திரு. என். திட்டப்பா: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) உதகையில் எச்.எம்.டி. கடிகார தொழிற்சாலை நிறுவுவது குறித்து மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:

(அ) ஆம்.

(ஆ) இதன் விளைவாக பெங்களூர் எச்.எம்.டி. நிறுவனத்தின் தொழில் நுணுக்கக் கூட்டுறவுடன் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் கடிகார உறுப்புக்களை ஒன்று இணைத்து ஆண்களுக்கான கைக்கடிகாரத் தொழிற்சாலை ஒன்றை உதகையில் நிறுவ, 16-3-1977 தேதியிட்ட தொழில் துறை அரசாணை எண் 378-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவு பால் வழங்கு சங்கங்கள்.

*வினு எண் 196—திரு. கே. உச்சி: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள பால் வழங்கு கூட்டுறவு சங்கங்கள் எத்தனை?

(ஆ) கூட்டுறவு சங்க அங்கத்தினர்களிடமிருந்து பெறும் பாலின் விலை என்ன?

(இ) சங்கங்கள் விற்பனை செய்யும் பாலின் விலை என்ன?

எண் 195—200 வினுக்களும், அவற்றுக்கான விடைகளும், பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அச்சிடப் பெற்றுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:

(அ) 21 பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

(ஆ) கூட்டுறவு சங்க அங்கத்தினர்களிடமிருந்து பெறும் பாலின் விலை பாலில் உள்ள கொழுப்புச் சத்து மற்றும் இதர சத்துக்களின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது. உதகை கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்தில் தற்போது 6% கொழுப்புச் சத்தும் 8.5% இதர சத்துக்களும் உள்ள ஒரு லிட்டர் பாலின் விலை ரூ. 1.73-ம் 3% கொழுப்புச் சத்தும் 7.5% இதர சத்தும் உள்ள ஒரு லிட்டர் பாலுக்கு விலை ரூபாய் 1.16ம் வழங்கப்படுகிறது.

(இ) 6% கொழுப்புச் சத்தும், 8.5% இதர சத்துக்களும் உள்ள ஒரு லிட்டர் பாலின் விலை ரூ. 1.81க்கும் 3% கொழுப்புச் சத்தும் 7.5% இதர சத்துக்களும் உள்ள ஒரு லிட்டர் பாலின் விலை ரூபாய் 1.25-ல் இருந்து ரூபாய் 1.50 வரையும் விற்கப்படுகிறது.

அரசு மற்றும் உள்ளாட்சி மன்ற ஊழியர்களுக்கு மருத்துவ வசதி.

*வினா எண் 197—திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரூ. 300-க்கு மேல் வருமானமுள்ள அரசு ஊழியர்கள் மற்றும் ஸ்தல ஸ்தாபன ஊழியர்கள் அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோருக்கு அரசு மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறுவதற்கான கட்டணங்களை உயர்த்தி புதிய உத்தரவு போடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:

(அ) ஆம்.

(ஆ) இதன் * விவரங்கள் அவை முன் வைக்கப்படுகின்றன.

தஞ்சை ராஜாமிராஸ்தார் மருத்துவமனை.

*வினா எண் 198—திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் R.M.H. மருத்துவமனையிலிருந்த நூற்றுக் கணக்கான படுக்கைகள் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

---

* 697-699ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.